**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்**

**முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, L.L.M.,**

**நீதித்துறை நடுவர், மேலூர்**

**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ஆம் நாள் புதன்கிழமை**

**Crl.M.P.No.2480/2025**

**in**

**RCS.No.175/2025**

**----**

ராஜகோபால்
த/பெ.கிருஷ்ணன், ....நிகழ்வுநிலை புகார்தாரர்

**/எதிர்/**

1) கிருஷ்ணன்,
த.பெ.பிச்சையப்பன்

2) ரவிச்சந்தின்,
த.பெ.ராமலிங்கம்

3) பார்த்திபன்,
த.பெ.ராமலிங்கம்

4) பிரியா,
க.பெ.பார்த்திபன்,

5) சதீஷ்குமார்.
த.பெ.ரவிச்சந்திரன் ....எதிர்மனுதாரர்கள்

மாநில அரசுக்காக
காவல் ஆய்வாளர்
கீழவளவு காவல்நிலையம்,
குற்ற எண்.353/2021 ....புகார்தாரர்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.15 06:54:55 +0530

கடந்த 21.01.2026 அன்று அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், நிகழ்வுநிலை புகார்தாரர் தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புகழேந்தி அவர்கள் ஆஜராகி ஆவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1) நிகழ்வுநிலை புகார்தாரர் தாக்கல் செய்த ஆட்சேபனை**

**1.1)** நிகழ்வுநிலை புகார்தாரர் தாக்கல் செய்த ஆட்சேபனையில் கடந்த 11.12.2021–ம் தேதி மாலை 6 மணியளவில் மேலவளசை, மந்தை திடலில் புகார்தாரருடைய Samsung கைபேசியை அவருடைய வண்டியில் வைத்துவிட்டு கபடி விளையாடி விட்டு கிளம்பும்போது அவருடைய கைபேசியை காணவில்லை என்றும், புகார்தாரர் அனைத்து இடத்திலும் தேடியும் கிடைக்கவில்லை என்றும், அப்போது மேலவளசையில் வசிக்கும் கிருஷ்ணன் என்பவர் திருடி சென்றுவிட்டார் என்பதை அறிந்துள்ளார் என்றும், பின்பு எதிரி கிருஷ்ணன் வீட்டிற்கு சென்று கைபேசியை கேட்கும்போது அவரை மிகக் கேவலமான கெட்ட வார்த்தைகளால் கோத்தா, கொம்மா என்று எதிரி திட்டியுள்ளார் என்றும், அதை கண்ட மற்ற எதிரிகளான ரவிச்சந்திரன், பார்த்திபன், பிரியா, மற்றும் சதீஷ்குமார் ஆகியோர்கள் கூட்டாக மனுதாரரை கையாளும், செருப்பாலும் கம்பியாலும் தாக்கி உள்ளன அதைக் கண்ட மனுதாரர் மாமா மகன் பிரவீன் மனுதாரரை காப்பாற்ற வந்துள்ளார். உடனே அனைவரும் சேர்ந்து மனுதாரரையும், அவரது மாமா மகன் பிரவீனையும் கடுமையாக தாக்கியுள்ளார்கள். அதனால் மனுதாரருக்கு முகத்திலும் கையிலும் மற்றும் காலில் மிக கடுமையான காயம் ஏற்பட்டுள்ளது என்றும், மற்றும் பிரவீன் என்பவருக்கு தொண்டை மற்றும் காலில் மிகக் கடுமையான காயம் ஏற்பட்டுள்ளது என்றும், மற்றும் பிரவீன் முச்சு விட முடியாமல் இருந்தார் என்றும், எனவே புகார்தாரர் மற்றும் அவரது மாமா

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.15 06:55:01 +0530

மகன் பிரவீன் ஆகியோர் உடனடியாக மேலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

**1.2)** மேலும் மேற்படி சம்பவம் குறித்து மனுதாரர் 6–ம் எதிர்மனுதாரரிடம் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு புகார் மனு கொடுத்து மேற்படி புகார் மனு பெற்றுக்கொண்ட 6–ம் எதிர்மனுதாரர் 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டம் 147, 294(பி), 323, 355, 379 (NH) & 506(1) IPC ஆக வழக்கு பதிவு செய்தனர். அதன் குற்ற எண்.353/2021 ஆகும். மேலும் பதிவு செய்யப்பட்ட மேற்சொன்ன வழக்கில் எந்த ஒரு மேல்நடவடிக்கையும் எடுக்கப்படாமல் அதற்கு மாறாக மேற்படி 1 முதல் 5 வரை உள்ள எதிரிகளிடமிருந்து பொய்யான புகாரை பெற்று புகார்தாரருக்கு எதிராக எதிர்வழக்கு குற்ற எண்.351/2021 பதிவு செய்யப்பட்டுள்ளது.

**1.3)** இந்நிலையில் 6–வது எதிர்மனுதாரர் சம்பவத்தின் உண்மை தன்மையும் அபாயகரமான விளைவுகளையும் புகார்தாரர் மற்றும் அவரது மாமா மகன் எதிரிகளால் தாக்கப்பட்டு அவர்களுக்கு ஏற்பட்ட காயத்தை கணக்கிடாமல் எந்தவித புலன்விசாரணையும் செய்யாமல் எதிரிகளுக்கு சாதகமாக எதிரிகளின் உறவினர்களிடம் 161(3) கு.வி.மு.ச பெறப்பட்டு எதிரிகளுக்கு சாதகமாக புகார்தாரருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு பிழை உடையதாக கருதி பொய்யான அறிக்கையை தயார் செய்து புகார்தாரர் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதை மறந்து டாக்டரிடம் எந்த ஒரு விசாரணையும் செய்யாமல் ஆக்சிடென்ட் ரிஜிஸ்டர் நகலை பரிசீலனை செய்யாமல் காயத்தின் தன்மையை கருதாமல் மனுதாரருக்கு வழக்கு சம்பந்தமாக தெரியப்படுத்தாமலும் உரிய விசாரணை செய்யாமலும் சாட்சிகளை விசாரணை செய்யாமலும் மேலும் புகார்தாரருடன் பாதிக்கப்பட்டவரை விசாரிக்காமலும், மனுதாரருக்கு தகவல் கொடுக்காமலும் வழக்கை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.15 06:55:08 +0530

**1.4)** இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரி புகார்தாரரை அழைத்து எந்த விசாரணையும் செய்யாமலும், மனுதாரர்/புகார்தாரருக்கு எவ்வித தகவலும் கூறாமலும் வழக்கை சட்டவிதிகளுக்கு முரணாக முடித்து வைத்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். மேலும் As per the Police Standing Order (PSO) 566 of Tamil Nadu ஒரே சமயத்தில் இரு தரப்பும் கொடுத்த புகார் மனுவின்படி கிரிமினல் வழக்கு தாக்கல் செய்திருந்தால் இரண்டு வழக்கிலும் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும், மேலும் விசாரணையில் சம்பவம் சம்மந்தமாக விரிவாக விசாரணை நடத்தப்பட்டு இரு புகார்களையும் Mistake of facts என்று முடித்து வைக்க வேண்டுமென ஆணை இருந்தும் அதனை பின்பற்றாமல் எதிரிகளுக்கு சாதகமாக காவல் அதிகாரிகள் செயல்பட்டுள்ளனர்.

**1.5)** மேற்கூறிய காரணங்களின்படி 6–வது எதிரி அல்லது வேறு ஒரு புலனாய்வு அதிகாரியை இந்த வழக்கில் நியமித்து வழக்கு சம்பந்தமாக புகார்தாரருக்கு அவசர சிகிச்சை அளித்த மருத்துவர் மற்றும் புகார்தாரர்/மனுதாரர் தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய உத்தரவு செய்தும் நீதி வழங்க வேண்டியும், மனுதாரரின் ஆட்சேபனை மனுவை பரிசீலனை செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள Mistake of facts இறுதி அறிக்கையை ரத்து செய்து இந்த வழக்கில் 6–வது எதிர்மனுதாரருக்கு அல்லது வேறொரு புலனாய்வு அதிகாரிக்கு இந்த வழக்கில் சட்டப்படியான சரியான மறு விசாரணை செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று நிகழ்வுநிலை புகார்தாரர் தனது ஆட்சேபனையில் குறிப்பிட்டுள்ளார்.

**2) இறுதி அறிக்கையின் சுருக்கம்**

**2.1)** இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி குற்ற இறுதி அறிக்கையில், சம்பவ இடம் சென்று பார்வையிட்டதிலிருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், ரகசிய விசாரணையிலிருந்தும் வாதி ராஜகோபால் குடும்பத்திற்கும், பிச்சப்பன் மகன் கிருஷ்ணன் குடும்பத்திற்கும், நீண்ட காலமாக

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.15 06:55:14 +0530

இடப்பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்துள்ளது. இந்நிலையில் கடந்த 11.12.2021–ம் தேதி 20.30 மணியளவில் வாதி ராஜகோபால் மற்றும் அவரது தரப்பைச் சேர்ந்த பாலகுருநாதன் மகன்கள் சரத்குமார், வினோத்குமார், பிச்சப்பன் (எ) மூக்கன் மகன் பிரவீன்குமார், வீரசிங்கம் மனைவி பூமணி ஆகியோர் கிருஷ்ணன் வீட்டிற்கு சென்று கிருஷ்ணனை பார்த்து ஏண்டா நொண்டி தேவிடியா மகனே உனக்கு அவ்வளவு திமிரா என்று அசிங்கமாக பேசி அனைவரும் சேர்ந்து அடித்து ஊனமுற்ற கிருஷ்ணனை காயப்படுத்தியுள்ளார்கள். வாதி புகாரில் குறிப்பிட்டுள்ளது போல அன்றைய தினம் மாலை 6 மணியளவில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், மேலும் காயம்பட்ட கிருஷ்ணன் தங்கள் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து விடுவார்மகள் என நினைத்து வாதி ராஜகோபால் தனது செல்போனை கிருஷ்ணன் திருடிச் சென்றுள்ளது தெரிந்து கேட்க சென்றபோது கிருஷ்ணன் மற்றும் அவரது தரப்பினர்கள் அசிங்கமாக பேசி கையாலும், செலுப்பாலும், கம்பியாலும் அடித்து காயப்படுத்தியதாக ஒரு நடவாத சம்பவத்தை நடந்ததாக புகாரில் மிகைப்படுத்தி கொடுத்துள்ளார் என்பதும், தன்னையும் தங்களை சார்ந்தவர்களையும் வழக்கில் இருந்து காத்துக்கொள்ள ஒரு பொய்யான புகாரை கொடுத்துள்ளார் என்பதும் உண்மை என விசாரணையில் புலனாகிறது. எனவே இவ்வழக்கை பொறுத்தமட்டிலும் பிழையுடையது Mistake of Facts என முடிவு செய்து, வாதிக்கு RC நோட்டீஸ் சார்பு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5) இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் இந்த வழக்கை கோப்பிற்கு எடுக்க வேண்டுமா? இல்லையா ? என்பதே ஆகும்.**

6) இரு தரப்பு வாதங்களையும் மற்றும் ஆவணங்களையும் பரிசீலனை செய்ததில்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.15 06:55:19 +0530

**7)** மனுதாரர் தனது புகார் மனுவில் 11.12.2021-ம் தேதி சம்பவம் நடந்ததாகவும், அதில் தனக்கு காயம் ஏற்பட்டதாகவும் இது தொடர்பாக மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு, 13.12.2021-ம் தேதி 14.30 மணிக்கு கீழவளவு காவல்நிலையத்தில் எழுத்து பூர்வமாக புகார் கொடுத்ததாகவும், அதற்கு மனு ரசீது 406/2021 கொடுக்கப்பட்டு அதன் பின்னர் 15.12.2021-ம் தேதி புகார் மனுவின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, காவல்நிலைய குற்ற எண்.353/2021 கொடுக்கப்பட்டுள்ளது. இம்மனுவின் புகார்தாரரை தாக்கியதாக சொல்லப்படும் எதிரி மனுதாரர் மீது சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்து அந்த வழக்கானது கீழவளவு காவல்நிலைய குற்ற எண்.351/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கு சம்பவமானது எதிரி கிருஷ்ணனின் வீட்டிற்கு முன்னால் நடந்ததாக போலீசார் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தின் அடிப்படையில் தெரியவருகிறது. பொதுவாக வழக்கும், அதே சம்பவத்தின் அடிப்படையில் உள்ள எதிர் வழக்கும் ஒரே சம்பவத்தின் போது இரு தரப்பினர்களுக்கும் எதிராக குற்றச்சம்பவம் நடந்திருக்க வேண்டும். இவ்வழக்கில் மனுதாரர் எதிரியின் வீட்டிற்கு சென்று மாற்றுத்திறனாளியான எதிரியை தாக்கியதாகவும், அவர் எதிரியை மீண்டும் தாக்கியதாகவும், அதற்கு மனுதாரர் புகார் கொடுத்துள்ளதாக குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையிலிருந்து தெரியவருகிறது. இவ்வழக்கின் எதிரி கிருஷ்ணன் மனுதாரர் மீது புகார் கொடுத்துவிடுவார் என்று பயந்து எதிரி மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

**8)** மனுதாரர் கொடுத்த வழக்கின் புகார் மனுவானது 2 நாட்கள் காலதாமதமாகவே கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு காலதாமதத்திற்கு மனுதாரர் தரப்பில் எந்தவொரு சிறப்பு காரணமும் அவரது மனுவில் குறிப்பிடவில்லை. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் சம்பவமானது எதிரி கிருஷ்ணன் வீட்டின் முன்னிலையில் நடந்ததாகவும், இம்மனுதாரர் சம்பவத்தன்று காலை தனது கைப்பேசி தொலைந்துவிட்டது குறித்து அங்கு சென்று எதிரி

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.15 06:55:24 +0530

கிருஷ்ணனை அசிங்கமாக பேசி அவரை தாக்கியதாகவும் தெரியவருகிறது. எதிரி கிருஷ்ணன் இவ்வழக்கில் முதலில் தாக்குதலை தொடங்கியதாகவோ, அல்லது பழிவாங்க வேண்டும் என்பதற்காக செயல்பட்டதாகவும் தெரியவரவில்லை. எனவே வழக்கு, எதிர் வழக்கு (Case and counter case) ஒரே சமயத்தில் இருதரப்பினர்கள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும். ஆனால் இவ்வழக்கில் மனுதாரரை எதிரி தாக்கியதாக எந்த முகாந்திரமும் தெரியவரவில்லை.

9) எனவே மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் மனுதாரரை எதிரி தாக்கி அவருக்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்று அவர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை மனுவின் அடிப்படையில் நிரூபிக்கவில்லை. எனவே இந்த ஆட்சேபனை மனுவானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு எதிரி மனுதாரரை தாக்கி சாதாரண காயம் ஏற்படுத்தினார் என்று நிரூபிக்கவில்லை என்பதனால் இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. மேலும் கீழவளவு காவல்நிலையம் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கை RCS No.175/2025-ல் வழக்கு போதிய முகாந்திரம் இல்லை (Mistake of Fact) என முடிக்கப்பட்டது சரியென ஏற்றுக்கொள்ளப்பட்டு RCS No.175/2025 முடிக்கப்படுகிறது.

10) இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது, RCS No.175/2025 in குற்ற எண்.28/2023 முடிக்கப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.04.15 06:55:30 +0530

**நீதித்துறை நடுவர்,**

**மேலூர்.**